வணக்கம்

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 18.03.2026** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

நாட்டில் கச்சா எண்ணெய் கையிருப்பு இயல்பான அளவில் உள்ளதாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அதிகபட்ச திறனுடன் செயல்பட்டு வருவதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில், அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் தயாராக உள்ள தொழில் பூங்காக்களை, 100 இடங்களில் நிறுவ மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5 மாநில சட்டமன்றத் தேர்தலை, வன்முறை அல்லது, தேவையற்ற தூண்டுதல் இல்லாத விதத்தில் நடத்த, தேர்தல் ஆணையம், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட அலுவலர்களை பணியில் அமர்த்தி உள்ளது.

புதுச்சேரியில், சட்டமன்றத் தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான 3ஆம் நாளான இன்று, வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்ய தொடங்கி உள்ளனர்.

--------------------------------

*செய்தியாளர் கூட்டம் 1* (19)

நாட்டில் கச்சா எண்ணெய் கையிருப்பு இயல்பான அளவில் உள்ளதாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அதிகபட்ச திறனுடன் செயல்பட்டு வருவதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது. மேற்காசிய நிலவரங்கள் குறித்து, சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்கள் இணைந்து, இன்று புதுடெல்லியில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில், பெட்ரோலியத் துறை இணைச் செயலர் திருமதி சுஜாதா ஷர்மா இதை தெரிவித்தார். உள்நாட்டில் எல்பிஜி உற்பத்தி, 40 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாகவும், சில்லரை விற்பனைக்கான எந்தவொரு எல்பிஜி

நிலையத்திலும், எல்பிஜி கையிருப்பு தீரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களுக்கான வர்த்தக எல்பிஜி ஒதுக்கீட்டை, மத்திய அரசு, 10 சதவிகிதம் உயர்த்தி இருப்பதாகவும், நீண்டகால அடிப்படையில், எல்பிஜி பயன்பாட்டாளர்கள், பிஎன்ஜி-க்கு மாறுவதை ஊக்குவிக்க, மாநிலங்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். நாடு முழுவதும், கடந்த சில நாட்களில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி சோதனையின் போது, தவறான முறையில் பயன்படுத்தப்பட்ட 15 ஆயிரம் எல்பிஜி சிலிண்டர்கள் கைப்பற்றப் பட்டுள்ளதாக, திருமதி சுஜாதா ஷர்மா தெரிவித்தார். எண்ணெய் நிறுவனங்களின் ஆய்வுக் குழுக்கள் மூலமாக, 2 ஆயிரத்து 500 எல்பிஜி விற்பனை நிலையங்களில், திடீர் சோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

*செய்தியாளர் கூட்டம் 2 (14)*

கப்பல் துறை சிறப்பு செயலர் திரு. ஆர்.கே சின்ஹா இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், வளைகுடா பகுதியில் இந்தியக் கப்பல்கள் அனைத்தும் பாதுகாப்பாகவே உள்ளதாக தெரிவித்தார். ஷிவாலிக், மற்றும் நந்தாதேவி எல்பிஜி கப்பல்களில் இருந்து, மாற்றி அனுப்பப்படும் எரிவாயுவை கையாள, விசாகப்பட்டினம் துறைமுகத்தில், 25 ஆயிரம் சதுரஅடி கூடுதல் பரப்பு ஒதுக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேற்காசிய நிலவரங்கள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திரமோடி நேற்று, யுஏஇ அதிபருடன் பேசியதாக, வெளியுறவுத் துறைச் செயலர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார். ஹோர்மூஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை, இருதலைவர்களும் வலியுறுத்தியதாக, அவர் கூறினார். மேற்காசிய பிராந்தியத்தில், அமைதி, ஸ்திரத் தன்மை, மற்றும், பாதுகாப்பை விரைந்து மீட்கும் முயற்சிகளில் ஒருங்கிணைந்து பாடுபடவும், இருதலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

------------------------------

*எண்ணெய் கப்பல் (4)*

இதற்கிடையே, ஐக்கிய அரபு எமிரேட்டுகளில் இருந்து, 81 ஆயிரம் டன் உயர்தர கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட, இந்தியாவின் ஜக் லாட்கி எண்ணெய் கப்பல், இன்று குஜராத் மாநிலம் முந்த்ரா துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

--------------------------------

*அமைச்சரவை 1 (13)*

நாட்டில், சாலை, மின்சாரம், தொலை தொடர்பு, பாதுகாப்பு உட்பட அனைத்து வசதிகளும் தயார் நிலையில் உள்ள வகையில், மொத்தம் 100 தொழில் பூங்காக்களை, 33 ஆயிரத்து 660 கோடி ரூபாய் செலவில் அமைக்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர், இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். 100 ஏக்கர் முதல், ஆயிரம் ஏக்கர் வரை பரப்புள்ளதாக, தொழிற் பூங்காக்கள் அமைக்கப்படும் என்றும், இதற்கென, ஏக்கருக்கு 1 கோடி ரூபாய் நிதி ஆதரவு அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

2023-24ஆம் ஆண்டு பருத்தி சாகுபடிப் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட பருத்திக்கான எம்எஸ்பி நிதி ஆதரவாக, இந்தியப் பருத்திக் கழகத்திற்கு, ஆயிரத்து 718 கோடி ரூபாய், வழங்கவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*அமைச்சரவை 2 (5)*

நாட்டில், சுமார் ஆயிரத்து 500 மெகாவாட் திறன் கொண்ட சிறு நீர்மின் உறபத்தி நிலையங்ளை சுமார் 200 இடங்களில் நிறுவ, புதிய திட்டம் ஒன்றையும், மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. வரும் நிதியாண்டு முதல் 4 ஆண்டுகளில், மொத்தம் 2 ஆயிரத்து 584 கோடி ரூபாய் மதிப்பில், இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

--------------------------------

*மோடி கட்டுரை (7)*

கடந்த 10 ஆண்டுகளில், மின்துறையில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் குறித்து, மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர்லால்,

தேசிய நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையை, பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்தியா, எதிர்காலத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், நீடித்த சுற்றுச் சூழலுக்கு ஏற்ற, வலுவான எரிசக்தி கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி வருவது குறித்து, இக்கட்டுரையில் பேசப்பட்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

--------------------------------

இலவச தடுப்பு (13)

தமிழ்நாடு-புதுச்சேரி உட்பட 5 மாநிலங்களில், வன்முறை அல்லது, தேவையற்ற தூண்டுதல் இல்லாத விதத்தில் தேர்தலை நடத்த, தேர்தல் ஆணையம், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட அலுவலர்களை பணியில் அமர்த்தி உள்ளது. இது, 70 வாக்காளர்களுக்கு 1 தேர்தல் அலுவலர் என்ற அளவில் அமைந்து இருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 15 லட்சம் வாக்குப்பதிவு அலுவலர்கள், எட்டரை லட்சம் பாதுகாப்புப் படையினர், 40 ஆயிரம் வாக்கு எண்ணிக்கை அலுவர்கள், 49 ஆயிரம் நுண்ணிலை பார்வையாளர்கள், 21 ஆயிரம் செக்டார் அதிகாரிகள் ஆகியோர் இதில் அடங்குவர். வாக்காளர்கள் தங்களுக்கான வாக்குச்சாவடி நிலைய அதிகாரிகளை தொடர்பு கொண்டு பேசும் வசதி, ECI Net மொபைல் செயலியில் வழங்கப் படுவதாகவும், தேர்தல் தொடர்பான புகார்களை 1950 என்ற கால் சென்டர் எண்ணில் பொது மக்கள் பதிவு செய்யலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

--------------------------------

*புதுச்சேரி மனுதாக்கல்* (14)

புதுச்சேரியில் சட்டமன்றத் தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான முதல் 2 நாட்களில் எவரும் மனு தாக்கல் செய்யாத நிலையில், 3ஆம் நாளான இன்று, திமுக, காங்கிரஸ், மற்றும், லட்சிய ஜனநாயக கட்சி வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்தனர். முதலியார்பேட்டை தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. சம்பத், உப்பளம் தொகுதியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, தட்டாஞ்சாவடி தொகுதியில், டாக்டர் ரோ. நித்தீஷ் ஆகியோர் திமுக சார்பில், மனு தாக்கல் செய்தனர். மணவெளி தொகுதியில் முன்னாள் அரசுக் கொறடா திரு. அனந்தராமன், காங்கிரஸ் வேட்பாளராக வேட்பு மனு தாக்கல் செய்தார். நெல்லித்தோப்பு தொகுதியில், திருமதி லதா ஜான்குமார், பாகூர் தொகுதியில் ரீகன் ஜான்குமார் ஆகியோர், லட்சிய ஜனநாயக கட்சி வேட்பாளர்களாக வேட்பு மனு தாக்கல் செய்தனர். இன்று வேட்பு மனு தாக்கல் செய்த மற்றவர்கள் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

-------------------------------

*தேர்தல் கீதம்* (8)

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில், வாக்காளர் விழிப்புணர்வை மேம்படுத்துவதன் மூலம், 100 சதவிகித வாக்குப் பதிவை உறுதிப்படுத்தும் வகையில், தேர்தல் ஆணையத்தின் SVEEP திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள தேர்தல் கீதத்தை, மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. குலோத்துங்கன் வெளியிட்டார். கடந்த தேர்தலில் எட்டப்பட்ட 82 சதவிகத வாக்குப்பதிவை, இம்முறை 100 சதவிகிதமாக உயர்த்த, அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும், இதன்மூலம், புதுச்சேரியை முன்னோடி யூனியன் பிரதேசமாக மேம்படுத்தலாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

-------------------------------

*காரைக்கால்* (16)

காரைக்கால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், மற்றும், வாக்காளர் சரிபார்ப்பு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள வலுவறைகளை, மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி இஷிதா ராட்டி,

இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாதுகாப்பு அறைகளுக்கான கண்காணிப்பு நடைமுறைகள், மற்றும், முன்னெச்சரிக்கை நடைமுறைகள் குறித்து, மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சௌஜன்யா, துணை ஆட்சியர் திரு. செந்தில்நாதன் ஆகியோருடன், அவர் ஆலோசனை மேற்கொண்டார். இதனை தொடர்ந்து, காரைக்கால் மாவட்டத்திற்கான தேர்தல் ஆணையத்தின் பொதுப் பார்வையாளர் திரு. அனுப் கிஞ்சி, அறிஞர் அண்ணா கல்லூரியில் அமைந்துள்ள வலுவறையை, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதற்கிடையே, மாஹேயில், சட்டமன்றத் தேர்தலுக்கான செலவினப் பார்வையாளராக, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட திரு. நிதின் பன்சால், இன்று பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, பொது மக்கள் தம்மை தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி எண்களையும், நேரில் சந்திப்பதற்கான நேர விவரங்களையும் வெளியிட்டுள்ளார்.

------------------------------

தொலை தொடர்பு (13)

6ஜி தொலை தொடர்பு தொழில்நுட்பங்களை வடிவமைத்து, மேம்படுத்தி, பயன்பாட்டிற்கு கொண்டு வருவதில், உலகின் முன்னணி நாடாக, 2030ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை மேம்படுத்தும் நோக்கத்துடன் புதுடெல்லியில், இன்று நடைபெற்ற சர்வதேச பயிலரங்கை, மத்திய தகவல் தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தொடக்கி வைத்தார். 6ஜி தொலை தொடர்பு யுகத்தில், தொலை தொடர்பு, மற்றும், இண்டர்நெட் சேவைகளின் வேகம் பல மடங்கு அதிகரிக்கும் என்றும், உலகிற்கான 6ஜி தர நிர்ணய விதிமுறைகளை உருவாக்கும் பணிகளில், இந்தியா தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார். இந்தியாவில், டேட்டா கட்டணங்கள், கடந்த 10 ஆண்டுகளில் 97 சதவிகிதம் குறைந்து இருப்பதாகவும், உலகிலேயே அதிக எண்ணிக்கையில், டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் நாடாக இந்தியா திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

------------------------------

*விமான சேவை (13)*

எந்தவொரு விமானத்திலும், டிக்கெட் பதிவு செய்யும் பயணிகள், கூடுதல் கட்டணம் செலுத்தாமல் தேர்வு செய்யத் தகுந்த இருக்கைகளாக, 60 சதவிகித இருக்கைகளை ஒதுக்குமாறு, மத்திய அரசு விமான சேவை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தி உள்ளது. ஒரே டிக்கெட்டில் பயணம் செய்பவர்களை, முடிந்த வரை அருகருகே அமர வைக்கவும், விளையாட்டு உபகரணங்கள், மற்றும், இசைக் கருவிகளை, விமானத்தில் எடுத்து செல்ல உகந்த வசதிகளை பயணிகளுக்கு வழங்கவும், அறிவுறுத்தப் பட்டுள்ளது. விமான சேவை ரத்தாகும் சூழல், அல்லது, தாமதமாகும் சூழலில், பயணிகளுக்கு உள்ள உரிமைகளை, விமான சேவை நிறுவனங்கள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும், இத்தகைய உரிமைகள் குறித்த விவரங்களை, இணைய தளம், மொபைல் செயலி, மற்றும், விமான நிலைய பதிவு கவுண்டரில், தெளிவான முறையில் காட்சிப்படுத்த வேண்டும் என்றும், சிவில் விமானப் போக்குவரத்து தலைமை இயக்குநர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

--------------------------------

*வானிலை (9)*

இன்றும்-நாளையும், தமிழகத்தின் ஒருசில இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளை பொறுத்தவரை, வரும் 22ஆம் தேதி வரை, மிதமான மழை நீடிக்கலாம் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக ஈரோடு மாவட்டம் வரட்டுப் பள்ளத்தில், 9 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 4 செ.மீ மழை பெய்துள்ளது. வெப்பநிலையை பொறுத்தவரை, கொடைக்கானலில் 9.7 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

--------------------------------

*விளையாட்டு (12)*

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க விரும்பும் விளையாட்டு வீரர்களிடம் இருந்து பணம் வசூலிக்க, தனியார் அமைப்பு

எதுவும் அங்கீகரிக்கப் படவில்லை என, மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசு, மற்றும், இந்திய ஒலிம்பிக் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதாக கூறிக் கொண்டு, தாய்லாந்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான கட்டணம் என்ற பெயரில், விளையாட்டு வீரர்களிடம் இருந்து, டாலர் கணக்கில் பணம் வசூலித்த போலி அமைப்பு ஒன்றையும், மத்திய அரசு கண்டுபிடித்து தடை செய்துள்ளது. சந்தேகத்திற்கு இடமான இத்தகைய அமைப்புகள், படங்கள், மற்றும், வீடியோக்கள் குறித்து, பொது மக்கள், 87 99 71 12 59 என்ற வாட்ஸ்-அப் எண்ணிற்கு தகவல் கொடுக்கலாம் என்றும், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

--------------------------------

நாட்டில் கச்சா எண்ணெய் கையிருப்பு இயல்பான அளவில் உள்ளதாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அதிகபட்ச திறனுடன் செயல்பட்டு வருவதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டில், அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் தயாராக உள்ள தொழில் பூங்காக்களை, 100 இடங்களில் நிறுவ மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5 மாநில சட்டமன்றத் தேர்தலை, வன்முறை அல்லது, தேவையற்ற தூண்டுதல் இல்லாத விதத்தில் நடத்த, தேர்தல் ஆணையம், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட அலுவலர்களை பணியில் அமர்த்தி உள்ளது.

புதுச்சேரியில், சட்டமன்றத் தேர்தலுக்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான 3ஆம் நாளான இன்று, வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்ய தொடங்கி உள்ளனர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**